| | | |
|---|---|---|
| | மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம் | |
| | நிலையறி பரீட்சை - 2021 | |
| | விஞ்ஞானம் | |

சுட்டெண் :- ......................................... தரம் 9 நேரம் :- 2 மணித்தியாலம்

## பகுதி - I

❖ **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**


(01) அமுக்கத்தின் அலகாக அமைவது
1) N $m^2$ 2) N $m^{-2}$ 3) $m^2$ 4) N

(02) புரட்டசோவாவில் அடங்காத நுண்ணங்கி யாது?
1) அமீபா 2) பரமீசியம் 3) இயூகிளீனா 4) கிளமிடோமோனஸ்

(03) மசகெண்ணெயில் இருந்து பல்வேறு எரிபொருள்களை வேறுபடுத்தும் முறை
1) கொதிநீராவிக் காய்ச்சி வடித்தல் 2) பளிங்காக்கல்
3) பகுதிபடக் காய்ச்சி வடித்தல் 4) ஆவியாக்கல்

(04) உயிரியல் ஆயுதமாகப் பயன்படுத்தப்படும் நுண்ணங்கி
1) ஸ்டெப்டோகோக்கஸ் தேமோபிலஸ் 2) அந்திராக்ஸ் பற்றீரியா
3) இலக்டோ பசிலஸ் 4) மெதனோ கொக்கஸ்


(05) படத்தில் காட்டப்பட்ட கண் சார்ந்த குறைபாடும், அதனை நிவர்த்தி செய்யும் வில்லை வகையும் முறையே
1) அண்மைப் பார்வை , குழிவுவில்லை
2) அண்மைப் பார்வை , குவிவுவில்லை
3) சேய்மைப் பார்வை , குழிவுவில்லை
4) சேய்மைப் பார்வை , குவிவுவில்லை



(06) B இனக் குருதியைக் கொண்ட ஒருவருக்கு குருதி குறுக்குப் பாய்ச்சல் செய்யக் கூடிய குருதி வகைகள்
1) Aயும் , Bயும் 2) Aயும் , Oயும் 3) Oயும் , Bயும் 4) Bயும் , ABயும்


(07) புவியின் ஆரம்ப கால வளிமண்டலத்தை ஆக்குவதில் எவ் வாயு பங்களிப்புச் செய்தது?
1) மெதேன் 2) ஒட்சிசன் 3) ஐதரசன் 4) நீராவி

(08) கல் ஒன்று தொங்கவிடப்பட்டு வாசிப்பு பெறப்பட்டதை படம் காட்டுகிறது. கல்லின் நிறையாக அமைவது
1) 30 N
2) 0.3 N
3) 3 N
4) 300 N




(09) இலங்கைக்கு மட்டும் உரித்தான சுதேச விலங்கினமாக அமைவது
1) யானை 2) செவ்வுடற் பூங்குயில் 3) ஆமை 4) திமிங்கிலம்

(10) செம்பு மோதிரத்தின் மீது வெள்ளி முலாமிடுவதைப் படம் காட்டுகிறது. இங்கு மின்பகுபொருளாக அமைவது
1) வெள்ள
2) செம்பு
3) வெள்ளிசயனைற் கரைசல்
4) செப்புசல்பேற் கரைசல்




(11) உயிர்ப் பல்வகைமைக்கான அச்சுறுத்தல் அல்லாதது எது?
1) சூழல் மாசடைதல் 2) ஆக்கிரமிப்பு உயிரினங்களின் பரம்பல்
3) சனத்தொகை அதிகரிப்பு 4) உயிர்ப் பல்வகைமை தொடர்பான கற்கை

(12) உள்நிலைக் காப்பிற்கு உதாரணமாக அமைவது
1) வில்பத்து காப்பகம் 2) பேராதனைப் பூங்கா
3) குமண 4) மேற்கூறிய யாவும் சரி

(13) பின்வருவனவற்றுள் இருவிழிப் பார்வையுடைய விலங்கு
1) புலி 2) நாய் 3) மாடு 4) தேவாங்கு

(14) கண்ணில் நீர்மயவுடனீர் வடிந்தேடுவது தடைப்படுவதனால் கண்ணிற்குள்ளான அமுக்கம் அதிகரித்துக் காணப்படும் நிலைமை
1) கட்காசம் 2) குளுக்கோமா 3) மாலைக்கண் 4) கண்நோய்

(15) தரப்பட்ட படம் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.




A- தாவரத் தண்டின் உச்சியில் உற்பத்தி செய்யப்படும் ஒட்சினானது கீழ் நோக்கிப் பரவுகின்றது.

B- ஒட்சின்கள் ஒளி குறைவாக கிடைக்கும் பக்கத்தில் குறைவாகவும், ஒளி கூடுதலாகக் கிடைக்கும் பக்கத்தில் கூடுதலாகவும் செறிவடைந்து காணப்படும்.

C- ஒளி குறைவான பக்கத்திலுள்ள கலங்கள் நீட்சியடைவதால் தாவரத் தண்டின் உச்சி ஒளியை நோக்கி வளைவடையும்.

தரப்பட்ட கூற்றுக்களில் சரியானது/சரியானவை
1) Aயும் , Bயும் 2) Bயும் , Cயும் 3) Aயும் , Cயும் 4) A,B,C மூன்றும்

(16) புவியின் மீது அங்கிகளின் தோற்றமாகக் கருதப்படும் வருடங்கள்
1) 3 பில்லியன் 2) 3.5 பில்லியன் 3) 5.5 பில்லியன் 4) 4.5 பில்லியன்

(17) திரவம் ஒன்றின் திணிவு 200kg.அதன் கனவளவு $0.25m^3$ எனின் திரவத்தின் அடர்த்தியைக் காண்க.
1) $80\ kg\ m^{-3}$ 2) $800\ kg\ m^{-3}$ 3) $8000\ kg\ m^{-3}$ 4) $8\ kg\ m^{-3}$

(18) வேற்றுப் பிரதேச ஆக்கிரமிப்பு உயிரினமாக அமைவது
1) நாயுண்ணி 2) பாத்தீனியம்
3) தொட்டி மீன் 4) மேற்கூறிய யாவும் சரியானவை

(19) உடற் சமநிலையைப் பேணுவதில் பங்குபற்றும் காதின் பகுதி
1) செவிப்பறை மென்சவ்வு 2) அரைவட்டக் கால்வாய்
3) நத்தைச்சுருள் 4) ஊத்தேக்கியாவின் குழாய்

(20) சூழற்றொகுதியொன்று தொடர்பாகத் தரப்பட்டுள்ள கூற்றுக்களைக் கருதுக
A - உயிர்க் கூறுகளுக்கிடையிலும், உயிரற்ற கூறுகளுக்கிடையிலும் இடைத் தொடர்பு காணப்படும்.
B - சக்தி ஒரு திசையை நோக்கிப் பாய்ந்து செல்வதுடன் பதார்த்தங்கள் சக்கரச் செயன்முறையில் சுழற்சியடைகின்றன.
C - சூழற்றொகுதியில் தொடர்ச்சியாக நடைபெறும் இடைத் தாக்கங்கள் உயிர்க்கோளம் நிலைபேறடையக் காரணமாக அமைகின்றது.

இவற்றுள் சரியான கூற்று/கூற்றுக்கள்

1) Aயும் , Bயும் 2) Aயும் , Cயும் 3) Bயும் , Cயும் 4) A,B,C மூன்றும்

**(20x2=40 புள்ளிகள்)**